V. kumaralingam

யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்

# J/Ilavalai
# Meihandan Maha Vidyalayam

## 2007

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

# FOUNDER'S DAY & PRIZE GIVING

## 24.11.2007

உ
சிவமயம்

யா/இளவாலை
மெய்கண்டான் மகா வித்தியாலயம்

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் – 2007

காலம் : 24.11.2007, சனிக்கிழமை
நேரம் : மு.ப. 9.00 மணி
இடம் : பாடசாலை ஏழூர் மண்டபம்

தலைவர் : **திரு.ச.சிவானந்தராசா (அதிபர்)**

## ஆசியுரை

**பிரம்மஸ்ரீ இ.பாலச்சந்திரக்குருக்கள் அவர்கள்**
(இளவாலை ஆனைவிழுந்தான் ஆலய பிரதம குரு)

## பிரதம விருந்தினர்

**திரு.ச.கைலாசநாதன் அவர்கள்**
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பளை)

## சிறப்பு விருந்தினர்

**திரு.மு.சிவராசரத்தினம் அவர்கள்**
(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர்)

## நிறுவுநர் உரை

**திரு.க.ரதிதரன் அவர்கள்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

## நிறைவுரை

**திரு.செ.பாலச்சந்திரன்** (ஆசிரியர்) **அவர்கள்**

## மாணவர் உறுதியுரை

மெய்கண்டானின் மாணவர் நாங்கள்
மேன்மை பெறவே கற்றிடுவோம்
கல்வியில் உயர்வோம் மெய்நெறி காப்போம்
கலைபல பயில்வோம் கவின் பெறுவோம்
வள்ளல் ஏழூர் காட்டிய வழியில்
வாழக் கற்போம் வளம் பெறுவோம்
வாழக் கல்மின்! வாழக்கல்மின்!! வாழக்கல்மின்!!!

## கொடிக் கீதம்

**பல்லவி**

மெய்கண்டான் அன்னை கொடி ஏற்றிடுவோம் - கல்வி
மேன்மை எல்லாம் பெருக போற்றிடுவோம் (மெய்கண்டான்)

**அனுபல்லவி**

பொய்மை அறியாமை இருள் அகன்றே - உலகில்
மெய்மை அறியும் கல்வி ஒளி பெருக (மெய்கண்டான்)

**சரணம்**

வள்ளல் ஏழூர்புகழ் பேசும் கொடி - இது
வாழக் கற்போரை வரவழைக்கும் கொடி
உள்ளத்தில் உண்மை ஒளி ஏற்றும் கொடி - இது
உத்தமராக்கி எமை உயர்த்தும் கொடி (மெய்கண்டான்)

## நிகழ்ச்சிநிரல்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- கல்லூரிக் கொடியேற்றலும் கொடிக்கீதமும்
- வரவேற்புரை
- ஆசியுரை
- அதிபர் அறிக்கை
- நிறுவுநர் நினைவுப் பேருரை
- பரிசளிப்பு பேருரை
- விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- கலை நிகழ்வுகள்
- நிறைவுரை
- பாடசாலைக்கீதம்

# அதிபர் அறிக்கை

கார்த்திகைத் திங்கள் கார்த்திகைத் தீப நன்னாளில் எல்லாம் வல்ல நடராசப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் இளவாலை ஆனைவிழுந்தான் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ இ.பாலச்சந்திரக்குருக்கள் அவர்களே!

பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.ச.கைலாசநாதன் அவர்களே! சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளரும் இப்பாடசாலையின் முன்னாள் அதிபருமாகிய திரு.மு.சிவராசரத்தினம் அவர்களே!

நினைவுப் பேருரை நிகழ்த்த வந்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் (நாடகமும் அரங்கியலும்) திரு.க.ரதிதரன் அவர்களே எமது பாடசாலையின் வளர்ச்சியில் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் ஆசிரியச் சகோதரர்களே என் அன்புக்கினிய மாணவச் செல்வங்களே மதிப்புக்குரிய பெற்றோர்களே பழைய மாணவர்களே நலன்விரும்பிகளே உங்கள் அனைவருக்கும் எனது இனிய காலை வந்தனங்கள்.

'வாழக் கல்மின்' எனும் பேரிலட்சியமாகக் கொண்டு வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் தூய சிந்தனையில் உதயமானதே இப்பாடசாலையாகும். இப்பேரிலட்சியம் கொண்ட நிறுவுநர் நினைவுநாளையும் பரிசளிப்பு நிகழ்வையும் ஒருமித்து நிகழ்த்திக் கொண்டிருப்பதில் பேருவகை கொள்ளும் இவ்வேளையில் 2005-2006, 2006-2007 ஆகிய இரு ஆண்டுகளுக்குமான அதிபர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

எமது விழாவினை ஆசீர்வதித்து ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் பிரம்மஸ்ரீ இ.பாலச்சந்திரக்குருக்களை இருகரம் கூப்பி வரவேற்கின்றேன். இன்றைய விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்கள் எமது பாடசாலையின்

வளர்ச்சியில் அக்கறை உடையவர். எமது பாடசாலையின் தேவைகளை அறிந்து உதவிகள் நல்குவதில் மிக ஆவலாகச் செயற்படுபவர். அவர்களையும் இருகரம் கூப்பி வரவேற்பதில் மகிழ்வடைகிறேன்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டிருக்கும் இப்பாடசாலையின் பழைய மாணவனும் இப்பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளருமான திரு.மு.சிவராசரத்தினம் அவர்கள் இப்பாடசாலையின் எந்த நிகழ்விலும் அக்கறையுடன் கலந்து கொள்பவர். எமது பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இப்பாடசாலையில் கல்வியைத் தொடரும் மாணவருக்கான ஊக்குவிப்புப் பரிசிலை வருடம்தோறும் வழங்கி வருகின்றார். அவரையும் இச்சமயத்தில் இருகரம் கூப்பி வருக வருக என வரவேற்கின்றேன்.

நினைவுப் பேருரை நிகழ்த்த வருகை தந்திருக்கும் யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் (நாடகமும் அரங்கியலும்) திரு.க.ரதிதரன் அவர்களையும் வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

இன்றைய நிகழ்வில் கலந்து கொண்டிருக்கும் சகோதரப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், சிற்றூழியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் வருக வருக என வரவேற்பதில் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்விழாவிற்கும் ஏனைய நிகழ்வுகளுக்கும் நிதி உதவி நல்கி பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுகின்ற நல்ல உள்ளம் படைத்த அனைவரையும் வருக வருக என்று வரவேற்று மனநிறைவு கொள்கின்றேன்.

## ஆசிரிய ஆளணி

பாடசாலையில் ஆணிவேர்களாகத் திகழ்பவர்கள் ஆசிரியர்கள். இவ்வாசான்களே இன்றைய இளம் சிறுவர்களை நாளைய நாட்டின் தலைவர்களாக்க முன்னின்று உழைப்பவர்கள். இவ்வகையில் எமது பாடசாலையில் நிரந்தர ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர்.

2006

| | | |
|---|---|---|
| இலங்கை அதிபர் சேவை 2 II | - | 01 |
| பட்டதாரிகள் | - | 06 |
| ஏனையோர் | - | 11 |
| ஆசிரிய நூலகர் | - | 01 |

2007

| | | |
|---|---|---|
| இலங்கை அதிபர் சேவை 2 II | - | 01 |
| பட்டதாரிகள் | - | 06 |
| ஏனையோர் | - | 12 |
| ஆசிரிய நூலகர் | - | 01 |

## மாணவர்கள்

எமது பாடசாலையில் ஏறக்குறைய முந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

| 2006 | | 2007 | |
|---|---|---|---|
| ஆரம்பப்பிரிவு 01 - 05 | 128 | ஆரம்பப் பிரிவு 01 - 05 | 126 |
| கனிஷ்ட பிரிவு 06 - 11 | 264 | கனிஷ்ட பிரிவு 06 - 11 | 244 |
| சிரேஷ்ட பிரிவு 12 - 13 | 14 | சிரேஷ்ட பிரிவு 12 - 13 | 13 |

## பரீட்சைப் பெறுபேறுகள்

எமது பாடசாலையைப் பொறுத்தவரையில் பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள பெற்றோருடைய பிள்ளைகளே கல்வி பயிலுகின்றனர். இவர்களுக்குப் பிரத்தியேக வகுப்பிற்குச் செல்லுமளவிற்குப் பணவசதி கிடையாது. ஆனாலும் ஆசிரியர்களுடைய அயராத முயற்சியினாலும் தன்னலமற்ற சேவையினாலும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றமை பராட்டுதற்குரியதாகும்.

இவ்வகையில் 2005 இல் க.பொ.த(சா.த) பரீட்சையில்

செ.மேரிபுஸ்பமலர் 3A, 4B, 1C, 2S

2006ம் ஆண்டு க.பொ.த.(சா.த) பரீட்சையில்;

ப.யமீரா 2A, 4B, 1C, 2S

த.பிரசன்யா 2A, 2B, 4C, 2S

மேலும் க.பொ.த. (உ.த) 2006 இல் செல்வி.தி.பகீரதி - BCS.

இம் மாணவமணிகளை கற்பித்து வழிகாட்டிய ஆசிரியர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

2006இல் தோற்றியோர் (க.பொ.த.உயர்தரம்)

| | | |
|---|---|---|
| தமிழ் | - | 100% |
| அளவையியல் | - | 29% |
| இந்துநாகரிகம் | - | 100% |
| ஆங்கிலம் | - | --- |
| பொது உளச்சார்பு | - | --- |
| பல்கலைதகுதி | - | 02 |

## மாணவ முதல்வர் அணி

மாணவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுடன் சிறந்த தலைமைத்துவம், ஆளுமை உடையவர்களாக செயற்படுதல் அவசியமானது. இதற்கு வழிகாட்டியாக திரு.செ.ஆனந்தீஸ்வரன் அவர்கள் செயற்படுகின்றார். 2006 இல் சிரேஷ்ட மாணவ தலைவனாக செல்வன்.தி.மகிந்தன், சிரேஷ்ட மாணவ தலைவியாக செல்வி.து.டஜிதா செயற்பட்டனர். 2007 இல் சிரேஷ்ட மாணவ தலைவனாக செல்வன்.சி.ரிஷாந்தன், சிரேஷ்ட மாணவ தலைவியாக செல்வி.தி.டிலக்சனா செயற்படுகின்றனர்.

## இணைபாடவிதானச் செயற்பாடுகள்

பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டம் வேலைத்திட்டம் என்பவற்றுக்கு அமைவாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற போதும் மாணவரது ஆளுமைகள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யவும் வெளிக்கொணரவும் இனங்காணவும் இணைபாடவிதானச் செயற்பாடுகள் அவசியமாகின்றன. இந்நோக்கில் எமது பாடசாலையும் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நூலகம்

வாசிப்பு மனிதனை பூரணத்துவம் ஆக்குகின்றது. அவ்வகையில் ஆசிரிய நூலகர் செல்வி.செ.சுகிர்தா அவர்களின் மேற்பார்வையின் கீழ் நூலகம் செயற்பட்டு வருகின்றது. நூலகத்தை ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

# மன்றங்கள்

இலைமறை காயாக உள்ள ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்குத் தக்க களங்களாக விளங்குவன மன்றங்கள். இதன்மூலம் மாணவர்களிடத்தில் சிறந்த தலைமைத்துவப் பண்புகள், ஆளுமை விருத்திகள், கடமைக்கூறுகள் போன்றன வளர்த்தெடுக்கப்படுகின்றன. இவ்வகையில் ஆரம்ப மாணவர் மன்றம், சைவ மன்றம், தமிழ் மன்றம், விஞ்ஞான கணித மன்றம், சமூகக்கல்வி மன்றம், ஆங்கில மன்றம், உயர்தர மாணவர் மன்றம் ஆகியன இயங்குகின்றன.

சைவமன்றம் சைவசமய விழாக்களின் போது தனது செயற்பாட்டைச் செவ்வனே செய்து வருகின்றது. சிவராத்திரி, நவராத்திரி, குருபூசைத் தினங்கள், வெள்ளிக்கிழமை ஆராதனைகள், மாதா பிதா குரு தெய்வ வழிபாடு ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதற்குப் பொறுப்பாசிரியராகச் செயற்பட்டு வருகின்ற திருமதி.சு.கிருபானந்தராசா அவர்களைப் பாராட்டுகின்றேன்.

ஆங்கிலதினப் போட்டிகளில் எம் மாணவர்கள் ஏனைய கல்லூரிகளுடன் போட்டியிட்டுத் தமக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துள்ளனர். இவ்வருடம் கோட்டமட்ட ஆங்கிலதினப் போட்டியில் செல்வி.சிவதாரணி தரம் 03 Recitation 03ம் இடத்தையும் செல்வன்.ஜெயப்பிரதாபன் தரம் 07 copy writing 1ம் இடத்தையும் சி.விதுசனா தரம் 6 Dictation 2ம் இடத்தையும் பா.சோபனா Recitation 3ம் இடத்தையும் பெற்றுள்ளனர். இவர்களுக்கும் பொறுப்பாசிரியராகச் செயற்படுகின்ற திருமதி.சி.தர்மபாலா ஆசிரியைக்கும் எனது பாராட்டுக்கள்.

தமிழ்த்தினப் போட்டிகளில் மாணவர்களைப் பங்குபெறச் செய்து வெற்றியீட்டச் செய்கின்ற தமிழ்மன்ற பொறுப்பாசிரியராக திருமதி.மா.உதயகுமார் அவர்கள் செயலாற்றி வந்துள்ளார். கோட்டமட்ட தமிழ்தினப் போட்டி (2006) இல்

| | | | |
|---|---|---|---|
| பிரிவு 4 | கவிதை | ம.காத்தாயினி | முதலாம் இடம் |
| பிரிவு 5 | கவிதை | தி.டிலக்ஷனா | இரண்டாம் இடம் |
| பிரிவு 5 | குறுநாடக ஆக்கம் | தி.மகிந்தன் | மூன்றாம் இடம் |
| பிரிவு 5 | சிறுகதை ஆக்கம் | சி.ஜிவிதா | முதலாம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| பிரிவு 5 | இலக்கணப்போட்டி | து.டஜிதா | மூன்றாம் இடம் |
| பிரிவு 3 | கட்டுரை கடிதம் | இ.நிதர்சா | இரண்டாம் இடம் |
| திறந்தபோட்டி | நாடகம் | | மூன்றாம் இடம் |
| குழு 1 | நடனம் | | முதலாம் இடம் |

ஆகிய நிகழ்ச்சிகள் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்க தாகும். மேலும் வலய மட்டத்தில் 2006

- கவிதை ம.காத்தாயினி மூன்றாம் இடம்
- 2006 சிந்துநடைக்கூத்து கோட்டமட்டம் முதலாம் இடம்
- 2006 தென்டோடிக்கூத்து கோட்டமட்டம் 1ம் இடம், வலய மட்டம் 3ம் இடம்.
- 2007 தென்மோடிக்கூத்து கோட்டமட்டம் 1ம் இடம், வலயமட்டம் 1ம் இடம், மாவட்ட மட்டம் 3ம் இடம்.

ஆகிய நிகழ்ச்சிகள் வெற்றிபெற்றமை சுட்டிக்காட்டத்தக்க தாகும். மேலும் கோட்டமட்ட சிறுவர் முதியோர் தினப் போட்டியில் (2007)

| | | | |
|---|---|---|---|
| கவிதை | - | ம.காத்தாயினி | 3ம் இடம் |
| கவிதை | - | தி.டிலக்சனா | 1ம் இடம் |
| கட்டுரை | - | சி.பிரியதர்சினி | 3ம் இடம் |

ஆகியோர் வெற்றியீட்டியுள்ளனர். 2006 இல் தேசியமட்ட சிறுவர் முதியோர் தினப் போட்டியில் செல்வி.பு.கஜறூபி 5ம் இடத்தைப் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்துள்ளார்.

**2006 கோட்டமட்ட சமூகக்கல்விப் போட்டி**

| | |
|---|---|
| சு.சுவேதிகா | 1ம் இடம் |
| ம.கிருஷாயினி | 3ம் இடம் |
| ம.காத்தாயினி | 1ம் இடம் |
| த.கோபிநாத் | 1ம் இடம் |
| ம.அன்பழகன் | 2ம் இடம் |

**2007 கோட்டமட்ட விஞ்ஞானப் போட்டிகள்**

| | | |
|---|---|---|
| தரம் 7 | ப.டினோஜா | 1ம் இடம் |
| தரம் 9 | ம.கிருசாயினி | 3ம் இடம் |

கணிதப் போட்டி

தரம் 7 சி.வற்சாயினி 2ம் இடம்

கோட்ட ரீதியில் வணிகப்போட்டி

சி.பிரசாந்தினி நிலை 2

கா.திவ்ஜா நிலை 2

இப்போட்டிகளில் கலந்து வெற்றியீட்டியுள்ள மாணவர் களுக்கும் அவர்களுக்கு வழிகாட்டி உதவிய ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இவ்வருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் எமது பாடசாலை மாணவர்களும் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்துள்ளனர்.

| | |
|---|---|
| செல்வன்.கருணன் கபிலன் | 159 |
| செல்வி.விக்கினேஸ்வரன் பிரியங்கா | 146 |

பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல்;

| | |
|---|---|
| செல்வன்.இரவீந்திரன் காலேப் | 128 |
| செல்வி.இரத்தினசிங்கம் சுதர்சினி | 123 |
| திருநாவுக்கரசு மதுராதீபன் | 110 |

ஆகியோர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பரீட்சைக்கு மாணவர்களை நெறிப்படுத்தி உதவிய ஆசிரியர் திரு.தி.பரமேஸ்வரன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## ஆசிரியர்களுக்கான ஆக்கசாதனைப் போட்டி

மனைப்பொருளியல் பாடத்தில் ஆசிரியர்களுக்கான ஆக்கசாதனைப் போட்டியில் திருமதி.ச.இலட்சியன் ஆசிரியர் அவர்கள் கோட்டமட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும் வலய மட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளமை எமது பாடசாலைக்குக் கிடைத்த கௌரவமாகும்.

## சாரணியம்

எமது பாடசாலையில் சாரணியம் மிகவும் சிறப்பான முறையில் செயற்பட்டு வருகின்றது. சாரணியத்துக்குரிய பொறுப்பாசிரியராகத் திரு.செ.ஞானசொரூபன் அவர்களும்

குருளைச் சாரணப் பொறுப்பாசிரியராக செல்வி.ச.சின்னத்துரை அவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

குருளைச் சாரணியம் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. மாணவர்களுக்கு குருளைச் சாரணியச் சின்னம் சூட்டப்பட்டது. இதற்குப் பொறுப்பாக இருந்த செல்வி.ச.சின்னத்துரை ஆசிரியரைப் பாராட்டுகின்றேன்.

சென்ற வருடமும், இவ்வருடமும் சாரணிய மாணவர்கள் பாசறை அமைத்தல் செயற்பாட்டில் திறம்படச் செயற்பட்டனர். நான்கு மாணவர்கள் மாவட்டச் சாரணர் சின்னம் பெற்றுக்கொண்டனர். இதற்குப் பொறுப்பாகச் செயற்பட்ட ஆசிரியர் திருசெ.ஞானசொரூபனைப் பாராட்டுகின்றேன்.

## விளையாட்டுத்துறை

மாணவர்களின் ஆற்றுகையை மேம்படுத்துவதிலும் உடல் உள உறுதிப்பாட்டுக்கும் பங்காற்றுவதில் விளையாட்டுத்துறை சிறப்பிடம் பெறுகிறது. அவ்வகையில் எமது பாடசாலையில் வருடாந்தம் இல்ல மெய்வல்லுநர் போட்டி சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் 2006 இல் கோட்டமட்ட கரப்பந்தாட்ட போட்டியில் 15 வயதின் கீழ் ஆண்கள் மூன்றாம் இடத்தையும் 17 வயதின் கீழ் ஆண்கள் இரண்டாம் இடத்தையும் 19 வயதின் கீழ் ஆண்கள் 3ம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். கோட்டமட்ட வலைப்பந்துப் போட்டியில் 19 வயதின்கீழ் பெண்கள் அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

17 வயதின் கீழ் ஆண்கள் வலய மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். கோட்டமட்ட மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றி வலய மட்டத்திற்கு 7 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்விளையாட்டுக்களுக்குப் பொறுப்பாசிரியராக திருமதி.க.பரமேஸ்வரன் அவர்களும் அணிப் பொறுப்பாசிரியர் திரு.தி.பரமேஸ்வரன் அவர்களும் பயிற்றுநராக செல்வன்.S.செந்தூரன் அவர்களும் செயற்பட்டுள்ளனர்.

2007 கோட்டமட்ட கரப்பந்தாட்டப் போட்டியில்;

| | | பயிற்றுநர் |
|---|---|---|
| 15 வயதின் கீழ் ஆண்கள் | 2ம் இடம் | S.செந்தூரன் |
| 17 வயதின் கீழ் ஆண்கள் | 2ம் இடம் | வ.கஜேந்திரன் |
| 19 வயதின் கீழ் ஆண்கள் | 3ம் இடம் | நா.வினோத் |

விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக திருமதி.க.பரமேஸ்வரன் அவர்களும் அணிப் பொறுப்பாசிரியராக திரு.தி.பரமேஸ்வரன் அவர்களும் செயற்பட்டனர்.

| | | பயிற்றுநர் |
|---|---|---|
| 15 வயதின் கீழ் பெண்கள் | 3ம் இடம் | S.செந்தூரன் |
| 17 வயதின் கீழ் பெண்கள் | 2ம் இடம் | S.செந்தூரன் |
| 19 வயதின் கீழ் பெண்கள் | 2ம் இடம் | S.செந்தூரன் |

விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் திருமதி .க.பரமேஸ்வரன் அணிப் பொறுப்பாசிரியர்கள்

| | | |
|---|---|---|
| 15 வ.கீழ் | செல்வி.ச.சின்னத்துரை | செல்வி.ந.சித்திராங்கி |
| 17 வ.கீழ் | செல்வி.இ.மதிவதனி | செல்வி.செ.சுகிர்தா |
| 19 வ.கீழ் | திருமதி.தி.புஸ்பராணி | திருமதி.வ.இராமச்சந்திரன் |

வலயமட்டப் போட்டியில் (கரப்பந்து) பெண்கள் அணி (19 வயதின் கீழ்) முதலாம் இடம் பெற்றது. பெண்கள் அணி முதன் முதலாக வலய மட்டத்தில் முதலாம் இடம்பெற்றமை இதுவே முதல் தடவையாகும். இதற்கு ஒத்துழைப்பு நல்கிய பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகளுக்கு எனது நன்றிகள்.

மேலும் கோட்ட ரீதியில் வலைப்பந்தாட்டம், கிரிக்கெற், பூப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய நிகழ்வுகளிலும் எமது பாடசாலை மாணவர்கள் பங்குபற்றினர்.

மெய்வல்லுநர் போட்டியில் கோட்டமட்டம் வலய மட்ட ரீதியில் மாணவர்கள் பங்குபற்றினர்.

குடும்பமட்ட கிளித்தட்டில் 10 வயதுக்கு உட்பட்ட மாணவர்களில் பெண்கள் முதலாம் இடத்தையும் ஆண்கள் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் பாடசாலையின் வரலாற்றில் பதிவேடாகக் காணப்படும் கரப்பந்தாட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டி

நடாத்தப்பட்டது. இது ‘எல்லை கடந்த நட்சத்திரம்’ என அழைக்கப்பட்டது.

விளையாட்டு வீரர்களுக்கான சீருடையை Dr.த.பேரானந்த ராஜா அவர்கள் அன்பளிப்புச் செய்தார். பெண்களுக்கான சீருடையை திருமதி.த.ஞானச்சந்திரன், செல்வி.வி.சேந்தினி, செல்வி.இ.மதிவதனி, செல்வி. ச.சின்னத்துரை, செல்வி.ந.சித்திராங்கி ஆகியோர் அன்பளிப்புச் செய்தனர்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கு அபிவிருத்திச் சங்கத்தின் பங்களிப்பு அவசியமானதொன்றாகும். அவ்வகையில் இச்சங்கத்தின் பதவி வழித்தலைவராக திரு.ச.சிவானந்தராசா அவர்களும் செயலாளராக திரு.வே.சண்முகநாதன் அவர்களும் பொருளாளராக திருமதி.சு.கிருபானந்தராசா அவர்களும் செயலாற்றி வருகின்றனர்.

2006 இல் ஆரம்பக்கல்வி வகுப்பறை மூடி அடைத்தல், கணனி அறை புனரமைப்புச் செய்தல் ஆகிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## பழைய மாணவர் சங்கம்

பாடசாலை முன்னேற்றத்தைக் குறியாகக் கொண்டு இயங்கி வருகின்ற இச்சங்கத்தின் தலைவராக அதிபரும், செயலாளராக திரு.சு.மதிமுகன் அவர்களும் பொருளாளராக திருமதி.பு.திருநாவுக்கரசு அவர்களும் பணியாற்றி வருகின்றனர்.

## புதிய கட்டடம்

எமது வலயக்கல்விப் பணிப்பாளர் பாடசாலைக்கென கணனி ஒன்றைத் தந்துள்ளதுடன் ஆரம்பக் கல்வி வகுப்பறை மூடியடைத்தல், விஞ்ஞான அறை திருத்த வேலை போன்ற தேவைகளுக்காக நிதி ஒதுக்கித் தந்துள்ளார். அத்துடன் அவரது நிதி ஒதுக்கீட்டில் எமது பாடசாலை நூலகத்திற்கான புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் நிர்வாகக் கட்டடத்தொகுதிக்கென முன்மொழிவினைச் செய்துள்ளமையும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

## ஆசிரியர் இடமாற்றம்

2006இல் எமது பாடசாலைக்கு முகாமைத்துவ உதவியாளராக திருமதி.பானுமதி முகுந்தன் அவர்கள் நியமனம் பெற்றிருந்தார். இவர் 2007 இல் ஆசிரியராக வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். எமது பாடசாலையில் ஆரம்ப வகுப்பில் கடமைபுரிந்த செல்வி.கை.கங்கா அவர்கள் 2006 இல் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவ்வருடம் எமது பாடசாலைக்கு சித்திரபாட ஆசிரியராக திரு.ச.கஜந்தன் அவர்களும் ஆரம்பக்கல்வி ஆசிரியராக திருமதி.சி.ஞானசேகரம் அவர்களும் எமது ஆசிரிய ஆளணியினருடன் இணைந்துள்ளனர்.

## ஆசிரியர் நலன்புரிக்கழகம்

ஆசிரியர் நலனைக் காக்கும் பணியுடன் ஆசிரியர் மத்தியில் நல்லுறவைப் பேணும் வகையிலும் ஆசிரியர் நலன்புரிக் கழகம் செயற்பட்டு வருகின்றது. ஆசிரிய நலன்புரிக் கழகத்தின் தலைவராக திருமதி.ச.இலட்சியன் அவர்களும் செயலாளராக திருமதி.சு.கிருபானந்தராஜா அவர்களும் பொருளாளராக திருமதி.உதயகுமார் அவர்களும் பணிபுரிகின்றனர்.

2006 இல் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 இற்கு திரு.செ.ஆனந்தீஸ்வரன் அவர்களும் திருமதி.சி.தர்மபாலா அவர்களும் திருமதி.ச.இலட்சியன் அவர்களும் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். இவர்கள் மென்மேலும் உயர்ந்த பதவிகள் பெற்றுச் சேவையாற்ற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

## பாராட்டுக்குரியவர்கள்

எமது சிறார்களுக்கான தண்ணீர் மோட்டார் பழுதடைந்த நிலையில் காணப்பட்டபோது உடனடியாகப் புதிய மோட்டார் தந்து உதவிய எமது பாடசாலை முன்னாள் அதிபர் சைவப்புலவர் திரு.சு.செல்லத்துரை அவர்களைப் பாராட்டுகிறோம்.

எமது பாடசாலையின் நிதிநிலைமையை அறிந்து தொண்டர் ஆசிரியர்களுக்கான நிதியை வழங்கிவரும் Dr.பேரானந்தராஜா அவர்களும் பாராட்டுதற்கு உரியவர்.

விளையாட்டு வீரர்களுக்கான சீருடையை Dr.பேரானந்தராஜா அவர்களும் பெண்களுக்கான சீருடையை திருமதி. த.ஞானச்சந்திரன், செல்வி.வி.சேந்தினி, செல்வி.இ.மதிவதனி, செல்வி.ச.சின்னத்துரை, செல்வி.ந.சித்திராங்கி ஆகியோர் அன்பளிப்புச் செய்தனர். இவர்களை இச்சமயத்தில் பாராட்டுகின்றேன்.

மேலும் மாதந்தோறும் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்து வருகின்ற பெற்றோர்களையும் பாராட்டுகின்றேன். எந்த நிகழ்வாக இருந்தாலும் உடனுக்குடன் பண உதவி வழங்கிவரும் பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் இச்சமயத்தில் பாராட்டு கின்றேன்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று இப்பாடசாலையில் தொடர்ந்து கற்கும் மாணவர்களுக்கு கல்விக்கான உதவுதொகை வழங்கிக் கௌரவப்படுத்தும் திரு.மு.சிவராசரத்தினம் (முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர்) அவர்களையும் பாராட்டுகின்றேன்.

கணினி அறை திருத்த வேலைக்கு நிதி வழங்கிய லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட Dr.வை.சற்குணராஜா அவர்களையும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மாவை. சோ.சேனாதிராஜா அவர்களையும் பாராட்டுகின்றேன்.

எமது பாடசாலையின் கரப்பந்து நிகழ்வுக்கு பயிற்சி வழங்கிய திரு.கஜந்தன், திரு.சுரேஷ், திரு.வினோத் ஆகியோரையும் உதைபந்து நிகழ்வுக்கு பயிற்சி வழங்கிய திரு.சுரேந்தர் அவர்களையும் வலைப்பந்து போட்டிகளுக்குப் பயிற்சி வழங்கிய த.சிந்துஜா அவர்களையும் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

பாடசாலையின் வேலி மற்றும் வகுப்பறைத் தடுப்புகளுக்கு பண உதவி நல்கிய ஆசிரிய நலன்புரிக் கழகத்தினரையும் இவ்வேளையில் பாராட்டுகின்றேன்.

எமது பாடசாலை மாணவர்களின் நிலையறிந்து மனமுவந்து மேலதிக கல்வியை வழங்கி பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு உதவிவருகின்ற

| | |
|---|---|
| செல்வி.மு.நிமாலினி | திரு.க.அச்சுதன் |
| செல்வி.மா.கயல்விழி | திரு.கு.மங்களேஸ்வரன் |
| செல்வி.சி.ஆன்சோபியா | திரு.நா.ஜெயக்காந்தன் |

ஆகியோரையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன்.

# கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்

எமது பாடசாலையின் நிலையறிந்து சகல வழிகளிலும் எமக்கு உதவிபுரிபவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். அந்த வகையில் எமது நிகழ்வுகள் அனைத்துக்கும் எதுவித கொடுப்பனவும் பெற்றுக்கொள்ளாது பக்கவாத்தியம் தந்துதவிய திரு.அகஸ்தின் அவர்களையும் திரு.சூசை அவர்களையும் கௌரவப்படுத்துகின்றேன்.

எமது பாடசாலை மாவட்டமட்ட நாட்டுக்கூத்து போட்டியில் பரிசுபெறுவதற்காக அல்லும் பகலும் பயிற்சியளித்து உதவிய அண்ணாவியார் திரு.அல்வின் அவர்களைப் பாராட்டிக் கௌரவப்படுத்துகின்றேன்.

எமது பாடசாலையின் அனைத்து விளையாட்டுக்களையும் பொறுப்பேற்று எதுவித கொடுப்பனவும் பெற்றுக்கொள்ளாது பயிற்றுவித்துவரும் எமது பாடசாலையின் பழைய மாணவன் திரு.செந்தூரன் அவர்களையும் சிறந்த சேவையாளர் என கௌரவப்படுத்துகின்றேன்.

எமது பாடசாலையில் விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாசிரியராக இருந்து மாணவர்களுக்குப் பயிற்சியளித்து போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டுவதற்காக அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்து வருகின்ற திருமதி.க.பரமேஸ்வரன் அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் கௌரவப்படுத்துகின்றேன்.

# வேண்டுகோள்

எமது பாடசாலையின் தேவைகளை அறிந்து கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களும் வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களும் செயற்பட்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எமது பாடசாலை வளர்ந்து வருகின்ற பாடசாலை. மீள்குடியேற்றம் நடைபெற்றும் இடப்பெயர்வின் காரணமாக அல்லற்படும் குடும்பங்களில் இருந்து வருகின்ற மிக வறிய பிள்ளைகளே இங்கு கல்வி கற்கின்றனர். இவர்கள் பிரத்தியேக வகுப்புக்களுக்குப் பணம் செலுத்திக் கல்வி கற்ற முடியாத நிலையில் பாடசாலை ஆசிரியர்களை மட்டும் நம்பியிருக் கிறார்கள். அவ்வகையில் எமது பாடசாலைக்கு க.பொ.த. உயர்தரத்திற்கு நான்கு ஆசிரியர்கள் தேவையாக உள்ள

போதும் ஒரு ஆசிரியர் மட்டுமே செயற்பட்டு வருகின்றார். ஏனைய மூன்று இடங்களுக்கும் ஆசிரியர்கள் தேவையாக உள்ளது. இதனைப் பெற்றுத்தர கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்கள் ஆவன செய்துதர வேண்டும் என பாடசாலைச் சமூகத்தின் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மேலும் எமது பாடசாலைக்குரிய ஆளணியில் ஆரம்பக்கல்விக்குப் பொருத்தமான ஆசிரியர்கள் இல்லை. பாட ரீதியாகப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. பொருத்தமான ஆளணியினரைத் தந்து இத்தேவைகளைப் நிவர்த்திசெய்ய வேண்டுகின்றேன்.

## நன்றிகள்

வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களது கனவு நனவாக என்றும் இப்பாடசாலையின் உயர்வுக்குத் துணையாய் அருள்பாலிக்கும் நடராசப் பெருமானின் பாதார விந்தங்களைத் தொழுதுகொண்டு நன்றியறிதலைத் தெரிவிக்க முன்வருகின்றேன்.

எமது அழைப்பை ஏற்று ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் பிரம்மஸ்ரீ தி.பாலச்சந்திரக்குருக்கள் அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

எமது அழைப்பை ஏற்றுப் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.ச.கைலாசநாதன் அவர்களுக்கும் எமது பாடசாலையின் சார்பாக நன்றிகள் உரித்தாகுக.

சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.மு.சிவராசரத்தினம் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறுவுநர் நினைவுரையை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.க.ரதிதரன் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

இன்றைய விழா சிறப்புற நடந்தேற நிதியுதவி செய்த சகலருக்கும் ஞாபகார்த்தப் பரிசில்களை வழங்கிச் சிறப்பித்த அன்பர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும். குறிப்பாகத் துர்க்கை அம்மன் தேவஸ்தானத்திற்கும் இவ்விடத்தில் எனது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது அழைப்பை ஏற்று வருகை தந்து விழாவினைப் பொலிவூட்டிக் கொண்டிருக்கும் சகோதரப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். இப்பாடசாலை பெருமையுடன் வீறுநடை போடவும் சாதனை படைத்திடவும் உதவிக்கரம் நீட்டும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் பழைய மாணவர் சங்கத்தினருக்கும் நலன்விரும்பிகளுக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

விழாவைச் சிறப்பாக நடாத்த ஒத்துழைப்பு நல்கிய எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன்.

நன்றி.

24.11.2007

ச.சிவானந்தராசா
அதிபர்

## 2006 பரிசில்கள்

**ஒன்றிணைந்த பாடங்கள்**

| தரம் - 01 | தரம் - 02 | தரம் - 03 |
|---|---|---|
| தி.சதுஷனா | ச.சிவதாரணி | இ.பபிதினி |
| மோ.நிலக்ஷனா | மோ.தனுஜா | பா.வித்தியாதரன் |
| இ.கஜகரன் | சி.பவதர்சினி | ஜெ.பவன்ஜா |

| தரம் - 04 | தரம் - 05 |
|---|---|
| க.கபிலன் | சி.விதூசனா |
| வி.பிரியங்கா | ஜெ.அனித்தா |
| இ.சுதர்சினி | த.தினேசன் |

தரம் - 06

| | |
|---|---|
| ஜெ.ஜெயப்பிரதாபன் | - ஆங்கிலம், சுகாதாரம், கணிதம் |
| பா.சோபனா | - தமிழ், அழகியல் |
| சி.வற்சாஜினி | - சுற்றாடற்கல்வி, செயல்முறைதிறனும் தொழிநுட்பத்திறனும் |
| ப.டினோஜா | - சைவசமயம் |
| சி.ஜனோஜன் | - றோமன் கத்தோலிக்கம் |

### தரம் - 07

சு.சுவேதிகா - விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சுகாதாரம், சமூகக்கல்வி

ப.லவண்யா - கணிதம், சைவசமயம், சங்கீதம், செயல்முறைத் திறனும் தொழிநுட்பத்திறனும்

சி.சிந்துஜா - நடனம்

ஜெ.ஜவண்யா - சித்திரம்

### தரம் - 08

ம.கிருஷாயினி - விஞ்ஞானம், தமிழ், கணிதம், சமூகக்கல்வி, சங்கீதம், சைவசமயம்

க.கம்சிகா - ஆங்கிலம், சுகாதாரம், நடனம்

செ.மேரிஜெசிமலர் - செயல்முறைத்திறனும் தொழிநுட்பத் திறனும் றோமன் கத்தோலிக்கம்

பா.சிவானுஜசர்மா - சித்திரம்

### தரம் - 09

இ.நிதர்ஷா - விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சுகாதாரம், சித்திரம்

ஜெ.தனுஷியா - செயல்முறைத்திறனும் தொழிநுட்பத் திறனும்

ஆ.பிரகாஷ் - சைவசமயம், கணிதம்

ச.பிரதீபா - நடனம்

க.பரிமளா - சங்கீதம்

சூ.றெக்னோலீனஸ் - றோமன் கத்தோலிக்கம்

### தரம் - 10

ம.கார்த்தாயினி - விஞ்ஞானம், தமிழ், கணிதம், சைவசமயம், ஆங்கிலம், சமூகக்கல்வி, விவசாயம், சங்கீதம், சுகாதாரம்

சி.கோவற்சன் - தகவல் தொழில்நுட்பம்

சி.தீபியா - சித்திரம்

சி.பிரியதர்சினி - நாடகமும் அரங்கியலும்

கா.நளாயினி - வர்த்தகம்

செ.கஜேந்தினி - மனைப்பொருளியல்

செ.மேரிசந்திரமலர் - றோமன் கத்தோலிக்கம்

தரம் - 11

| | | |
|---|---|---|
| த.பிரசன்ஜா | - | தமிழ், சைவசமயம், ஆங்கிலம், நாடகமம் அரங்கியலும் |
| ச.பிரபாலினி | - | கணிதம் |
| ப.யமீரா | - | விஞ்ஞானம். சங்கீதம், சமூகக்கல்வி |
| உ.யோகவதனி | - | மனைப்பொருளியல் |
| கா.கஜேந்திரன் | - | விவசாயம் |
| பா.நிதீபன் | - | சித்திரம் |
| நா.றசீதா | - | வணிகக்கல்வி |
| து.அஜிதா | - | சுகாதாரம் |

2007 உயர்தரம்

| | | |
|---|---|---|
| து.டஜிதா | - | இந்துநாகரிகம், ஆங்கிலம் |
| த.பிறிந்தியா | - | தமிழ், அளவையியலும் விஞ்ஞானமும் |
| தி.மகிந்தன் | - | நாடகமும் அரங்கியலும் |

## 2006 சிறப்புப் பரிசில்கள்

| | | |
|---|---|---|
| சிறந்த பாடகி | - | க.நளாயினி |
| சிறந்த சமயி | - | சி.தனுசன் |
| சிறந்த நடிகன் | - | மு.கேதீஸ் |
| சிறந்த நடிகை | - | து.அஜிதா |
| சிறந்த ஓவியர் | - | உ.யோகவதனி |
| உதைப்பந்தாட்ட வீரன் | - | ம.ஜோர்ஜ் நியூபேட் |
| கரப்பந்தாட்ட வீரன் | - | க.தினேஸ் (19 வயது பிரிவு) |
| | | ம.ஜோஜ் நியூபேட் (17 வயதுப்பிரிவு) |
| | | சி.சிவறூபன் (15 வயதுப்பிரிவு) |
| கரப்பந்தாட்ட வீராங்கனை | - | சி.சிவறோகினி (17 வயது பிரிவு) |
| வலைப்பந்தாட்ட வீராங்கனை | - | 19 வயது சி.சிவாஜினி |
| | | 17 வயது து.அஜிதா |
| | | 15 வயது ம.அர்ஜனா |
| துடுப்பாட்ட வீரன் | - | சூ.எட்மன் |
| மெய்வல்லுநர் வீரன் | - | த.கோபிநாத் |
| மெய்வல்லுநர் வீராங்கனை | - | ~~தி.தனுசன்~~ செ.கீர்த்தனா |
| சிறந்த சாரணர் | - | தி.தனுசன் |
| க.பொ.த.(சா.த) | - | செ.புஸ்பமலர் (3A, 4B, 1C, 2S) |
| க.பொ.த. (உ.த) | - | தி.பகீரதி (B, C, S) |

9ம் தர மாகாணமட்ட பெறுபேறு - ம.கார்த்தாயினி

சிறந்த கட்டுரையாளர் - ம.கார்த்தாயினி
சிறந்த கவிஞர் - தி.டிலக்ஷனா
நூலகப் பயன்பாடு - ஜெ.ஜெயப்பிரதாபன்
மெய்யவன் - தி.மகிந்தன்
மெய்யவள் - து.டஜிதா

## 2007 பரிசில்கள்

**ஒன்றிணைந்த பாடங்கள்**

| தரம் - 01 | தரம் - 02 | தரம் - 03 |
|---|---|---|
| நி.தரஞ்ஜன் | தி.சதுர்ஷனா | ச.சிவதாரணி |
| ஆ.சிந்துஜா | இ.துஸ்யந்தி | மோ.தனுஜா |
| றெ.ஜெனோல்ட் | ச.சஞ்ஜிதா | சி.பவதர்சினி |

| தரம் - 04 | தரம் - 05 |
|---|---|
| இ.பபிதினி | க.கபிலன் |
| பா.வித்தியாதரன் | இ.காலேப் |
| க.சுவிஸ்ரன் | இ.சுதர்சினி |

**தரம் - 06**

சி.விதுஷனா - தமிழ், சமயம், நடனம், ஆங்கிலம், சுகாதாரம்
இ.பர்ணபா - கணிதம், விஞ்ஞானம், சங்கீதம், சமூகக்கல்வி, றோமன் கத்தோலிக்கம்
செ.ஜெனனீதன் - சித்திரம், செயல்முறைத்திறனும் தொழிநுட்பத்திறனும்

**தரம் - 07**

பா.சோபனா - சமூகக்கல்வி, சமயம், சங்கீதம்
சி.வற்சாயினி - தமிழ், சுகாதாரம், நடனம்
ப.டினோயா - விஞ்ஞானம், ஆங்கிலம், செயன்முறைத் திறனும் தொழில்நுட்பத்திறனும்
ஜெ.ஜெயப்பிரதாபன் - கணிதம்
சி.சோபன்ராஜ் - சித்திரம்
சி.ஜனோஜன் - றோமன் கத்தோலிக்கம்

**தரம் - 08**

| | |
|---|---|
| சு.சுவேதிகா | - விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சங்கீதம் |
| ப.லவண்யா | - கணிதம், சுகாதாரம், சைவசமயம், செயன்முறைத் திறனும், தொழிநுட்பத் திறனும் |
| ஜெ.ஜவண்யா | - சித்திரம் |
| சி.சிந்துஜா | - நடனம் |

**தரம் - 09**

| | |
|---|---|
| ப.கிருஷாயினி | - கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சுகாதாரம், சைவநெறி, சங்கீதம் |
| பா.சிவானுஜசர்மா | - சமூகக்கல்வி, சித்திரம் |
| க.கம்சிகா | - நடனம் |
| சி.சுவேனியா | - றோமன் கத்தோலிக்கம் |
| சி.கிருஷ்ணவேணி | - செயன்முறைத் திறனும் தொழில்நுட்பத் திறனும் |

**தரம் - 10**

| | |
|---|---|
| இ.நிதர்சா | - விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சைவநெறி, சித்திரம் |
| ஆ.பிரகாஷ் | - கணிதம், சங்கீதம், தகவல் தொழில் நுட்பம் |
| சி.சிந்துஜா | - வரலாறு, சுகாதாரம், குடியுரிமை |
| கா.திவ்ஜா | - முயற்சியாண்மை |
| ஆ.ஜெஜீபா | - நடனம் |
| த.சுகந்தியா | - மனைப்பொருளியல் |
| சூ.றெக்னோலீனஸ் | - றோமன் கத்தோலிக்கம் |

**தரம் - 11**

| | |
|---|---|
| ம.காத்தாயினி | - விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், விவசாயம், சைவநெறி, சுகாதாரம், சங்கீதம் |
| செ.கயேந்தினி | - மனைப்பொருளியல், நாடகமம் அரங்கியலும் |
| த.பிரசின்னா | - சித்திரம் |

கா.நளாயினி - வர்த்தகம்
சி.கோவற்சன் - தகவல் தொழில்நுட்பம்
செ.மேரிசந்திரமலர் - றோமன் கத்தோலிக்கம்

**உயர்தரம் - 2008**

சி.ரிசாந்தன் - ஆங்கிலம், புவியியல்
தி.டிலக்ஷனா - தமிழ்
சி.ஜிவிதா - இந்துநாகரிகம்
அ.மயூரன் - அளவையியலும் விஞ்ஞானமும்

## 2007 சிறப்புப் பரிசில்கள்

சிறந்த பாடகி - செ.சந்திரமலர்
சிறந்த சமயி - ம.கார்த்தாயினி
வழங்குபவர் : திருமதி.கு.செல்வராணி அவர்கள்
திரு.செ.குமாரசாமி நினைவாக
சிறந்த நடிகன் - சி.கோவற்சன்
சிறந்த நடிகை - செ.கயேந்தினி
வழங்குபவர் : சண்முகநாதன் அவர்கள்
திருமதி.தையல்நாயகி நினைவாக
சிறந்த ஓவியர் - சி.தீபியா
உதைப்பந்தாட்ட வீரன் - ம.யோர்க்நியூட் (18 வயது பிரிவு)
சி.சிவரூபன் (16 வயது பிரிவு)
கரப்பந்தாட்ட வீரன் - ம.யோர்க்நியூபேட் (19 வயது பிரிவு)
து.சுயன் (17 வயதுப்பிரிவு)
ச.ஜினோஜன் (15 வயதுப்பிரிவு)
கரப்பந்தாட்ட வீராங்கனை- து.அஜிதா (19 வயது பிரிவு)
வழங்குபவர் : செல்வி.ச.நகநந்தினி அவர்கள்
திருமதி.சிவபாக்கியம் சங்கரப்பிள்ளை நினைவாக
கா.நளாயினி (17 வயது பிரிவு)
வ.கயூர்ணா (15 வயது பிரிவு)

வலைப்பந்தாட்ட வீராங்கனை
- து.அஜிதா (19 வயது பிரிவு)
கா.நளாயினி (17 வயது பிரிவு)

துடுப்பாட்ட வீரன் - பா.ஆதிபன்

வழங்குபவர் : திரு.க.மோகன் அவர்கள்

அமரர் திருமதி.சாந்தினி ஆனந்தராசா நினைவாஉ

மெய்வல்லுநர் வீரன் - ச.ஜினோஜன்

மெய்வல்லுநர் வீராங்கனை-கா.நளாயினி

உதைபந்தாட்ட கரப்பந்தாட்ட பயிற்றுநர் பரிவு - சி.செந்தூரன்

சிறந்த குருளைச் சாரணர் - இ.காலேப்

சிறந்த சாரணர் - சி.கோவற்சன்

தரம் 5 புலமைப்பரிசு - க.கபிலன் 159 புள்ளிகள்

வி.பிரியங்கா 146 புள்ளிகள்

வழங்குபவர் : மு.சிவராசரத்தினம் அவர்கள்

க.பொ.த.(சா.த) - ப.யமீரா (2A, 4B, 1C, 2S)

த.பிரசன்யா (2A, 2B, 4C, 2S)

9ம் தர மாகாணமட்ட சிறப்புப் பெறுபேறு - இ.நிதர்சா

வழங்குபர் : திருமதி.அ.மரியகொன்சிஸ்ரா அவர்கள்

செல்வி.அ.ஜெசிற்றா நினைவாக

சிறந்த கட்டுரையாளர் - தி.டிலக்ஷனா

வழங்குபவர் : திருமதி.கி.ஸ்கந்தராசா அவர்கள்

திரு.அ.தம்பிப்பிள்ளை நினைவாக

சிறந்த சிறுகதை எழுத்தாளர் - சி.ஜிவிதா

சிறந்த கவிஞர் - ம.கார்த்தாயினி

நூலகப் பயன்பாடு - இ.பர்ணபா

வழங்குபவர் : வ.க.துரைராஜா அவர்கள்

திருமதி.கந்தையா சீனிப்பிள்ளை நினைவாக

மெய்யவன் - சி.ரிசாந்தன்

மெய்யவள் - தி.டிலக்சனா

## கௌரவப் பரிசில்கள் பெறுவோர்

திரு.அகஸ்தின் திரு.சூசை

திரு.அல்வின் திரு.செந்தூரன்

திருமதி.க.பரமேஸ்வரன்

# ஞாபகார்த்த பரிசில்கள்

| வழங்குபவர் | நினைவிற்குரியவர் | துறை |
|---|---|---|
| 01. திருமதி.த.கிருபாசக்தி | ஏழூர் இராஜரட்ணம் | மொழியறிவு |
| 02. சேதுப்பிள்ளை குடும்பம் | திருமதி.க.சேதுப்பிள்ளை | க.பொ.த.(சா.த)<br>க.பொ.த.(உ.த) |
| 03. Dr.க.பாலசுப்பிரமணியம் | திரு.திருமதி.கந்தையா | விஞ்ஞானம் |
| 04. Dr.த.பேரானந்தராசா | திரு.அ.தம்பிப்பிள்ளை | விளையாட்டு |
| 05. கலாபூஷணம்,<br>சைவப்புலவர்<br>சு.செல்லத்துரை | | மெய்யவன் விருது<br>மெய்யவள் விருது |
| 06. திரு.ச.சிவானந்தராசா | திரு.க.சங்கரப்பிள்ளை | சேவையாளர் விருது |

## மாதா பிதா குரு தெய்வ வழிபாட்டுக் கீதம்

மாதா பிதா குரு தெய்வம் - அவர்
மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம்
ஆதாரமான தெய்வம் அன்னை தந்தை ஆசிரியர்
பாதாரவிந்தங்களை பணிந்து வணங்கிடுவோம் (மாதா)

என்னைச் சுமந்து பெற்று
இதயமாய் அரவணைத்துத்
தன்னை உருக்கிப் பாலாய்
தன் வலுவையூட்டி
பொன் எனவே போற்றி புகழுக்கு ஆளாக்கும்
அன்னை பதமலரை அனுதினமும் தொழுதிடுவோம் (மாதா)

சிந்தை செயல்கள் எல்லாம் எந்தன் உயர்வுக்காக்கி
சந்ததமும் முயன்று தன்னுயிர் போலக் காத்து
முந்தி இருக்க வைத்து முன்னறியும் தெய்வம்
தந்தை திருவடியை சந்ததமும் தொழுதிடுவோம்

கல்வி அறிவு ஒழுக்கம் கடமை உணர்வை ஊட்டி
எல்லை இல்லா அன்பால் எம்மை வழிநடத்தி
செல்லும் இடங்கள் எல்லாம் சிறப்பாய் இருக்கவைத்த
நல்லாசிரியர்களை நாளும் தொழுதிடுவோம்

உள்ளம் உருகித்தொழ அள்ளி அருள் பொழிந்து
தெள்ளத் தெளிந்த மனத்திண்ணம் எமக்களித்து
வெள்ளை மனதில் கல்வி வெள்ளம் எனப்பெருக்கும்
வள்ளல் இறைவன் பாதம் வணங்கித் தொழுதிடுவோம் (மாதா)

# பாடசாலைக் கீதம்

வாழிய மெய்கண்டான் மகா வித்தியாலயம்
நீடிசை யோடு பல்லூழி

ஏழூர் ராசரத்தினமா மகிபன்
இளவாலைக்கருள் நிதியம்
வாழக் கல்மின் எனும் பேர் இலட்சிய
வாசக மாண்பொருள் தந்தே... (வாழிய)

தாமரை ஏடு தீபம்நல் இடபம்
தாங்கிய இலச்சினை யாலே
தண்ணளி ஞானம் ஒளியொடு தருமம்
தரணியில் நாம்பெற நின்றே... (வாழிய)

கல்வியும் கலையும் ஒழுக்கமும் பெருக
காண்பரும் புகழெமக் காக்கி
வாழ்க... வாழ்க... வாழ்க...
மாநிலம் போற்றிட வாழ்க... (வாழிய)

சரணியா ஓவ்(f)செற் பிறின்ரேஸ், காசிப்பிள்ளை கட்டிடம், சங்கானை.